**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4411

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 01.08.2021

Accepted: 15.09.2021

Published: 01.10.2021

Citation:
Rathinakumar, N. "Biographies of the 'Kuravar' in Tamil Short Stories." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 2, 2021, pp. 36–50.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4411

*Corresponding Author:
rathnastamil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Biographies of the 'Kuravar' in Tamil Short Stories

**Dr. N. Rathinakumar**
*Assistant Professor, Department of Tamil, Madura College*
*Madurai, Tamil Nadu, India*
http://orcid.org/0000-0002-2930-576X

**Abstract -** In history, there are many categories of grassroots socialized minorities can be found, the particular attention in which 'narikuravars' alone have received except the other indigenous minorities in the mass environment. However, this situation has now become slightly changed. There are other various indigenous ethnic minorities have been coming out of the recent conversation that is because of internet connectivity of the environment which makes so viable. Moreover when compared to other ethnic minorities the narcissists sufferings and afflictions are very tragic one.

**Keywords:** Pandripatti, Enavaraviyal, Matramai, Kathaiyadal, Manipadukai.

## References

1. Ambai Kathaigal. (2012). Nagercoil, Kalasuvadu Pathipagam.
2. Udayasankar Pirithoru Maranam. (2009). Thiruvannamalai, Vamsi Books
3. Elankumaran, R. (1977). Puluvar (Thelivurai), Kumaragurupar, Meenakshiyammai kuram, Chennai, Saivasitthantha kalaka Veliyedu.
4. Edgar Thurston. (2010). *Theninthiya Kulangalum Kudigalum*, Third Volume, Thanjavur, Tamil University.
5. Sivakumar, M. (2021). *Cinema Oor Arputha Mozhi*. Chennai, Southvision Books
6. Tamiloli. (1989). *Uyiroviyangal*, Chennai, Pugazh Puthagalayam.
7. Paneerselvam Manico. (2009). *Kuravar Palangudi Enavaraviyal Aaivu*. Pondicherry, Vallinam.
8. Pandiya Kannan. (2014). *Malai Parai*. Coimbatore, Vidiyal Pathippagam.
9. (2009). Puliyur Kesikan. (e.g.) *Trikutarasappakkavirayar,* Kurtalakkuravanchi. Chennai, Saratha Pathippagam,
10. Ramesh Prem. (2006). *Kuruvikkara Seematti*, Chennai, Marutha Pathippakam.
11. Murugesapandian, N. (2019). N. Shriram – Therntheductha Sirukathaigal, Chennai, Discovery Book Palace.
12. Mukilnilavan. (2010). *Kutraparamparai Arasiyal – Perungamanalloorumunvaittu,* Madurai, Karuthuppatrai

## Articles

1. Karasurpadmabharati. (2017). *'Narikkuravar'* Bhagdavatsalabharati (Editor), Tamilagathil Naadodigal, Puthanatham, Adaiyalam Pathipagam
2. Seenivasavarma, K. (2018). *'Narikkuvargalin Vazhviyal Murai'*, Vanamamalai, N (Editor), Makkalum Marabugalum, Chennai, New Century Book House (P) Ltd.,
3. Venugopal, S. (2018). *'Etharvathamum Tamil Sirukathaigalum'*, Selvakumar. M. (Editor), Tamil Sirukathaigalin Samakala Selnerigal, Madurai, Karuthupatrai,
4. Paneerselvam, Manico, (2014). *'Tamil Punaikathaigalil Alaikudigal Vazhvu: Kutraparambariyinulum Vilimbil Niruthappatta Kuravar, Erular, Ottar'*, Mukilnilavan (Editor), Tamil Elakiyathil Kutrapparambaraiyenar, Palai, Madurai

**Websites**
1. Iraniyan, https://www.youtube.com/watch?v=8wO9EcJ-b-M
2. Devaraj, M., Mattru Vezhi, https://keetru.com/index.php/2009-10-07-12-27-44/2012-sp-876771754/20482-2012-07-15-14-46-20
3. Naropo, Thuyonin Irumunaiai Vaithu Pathagai, Website Magazine https://padhaakai.com/2017/12/10/on-thooyan/
4. Paneerselvam, Manico, "Naveena Kalathil Kuravar Palangudiyinar Nilai",
5. https://www.keetru.com/index.php/2015-03-26-07-29-50/puthiya-munnodi-may2016/31464-2016-09-15-11-46-57).
6. Bapoon-Jallikattupandrikattu, https://www.youtube.com/watch?v=mRYIZSJFUsY.
7. Paramil, Kadan Kandathu, 2010, https://azhiyasudargal.blogspot.com/2010/09/blog-post_06.html

**Dictionary**
1. Singaravelu Muthaliyar, A. (2014). Chennai, Abidhanasinthamani Seethai Pathippagam

**Reference Books**
1. Akilan. (2009). *Tamil Sirukathai Thoguthi – 2*, Chennai, Sahitya Akademi.
2. Arivumathi. (1999). Adamanam, Maan Ithazh, Coimbatore, Tamil Oosai Pathipagam
3. Irai Anbu. (2009). *Narippal*, Chennai, New Century Book House (P) Ltd.,
4. Gautamchanna. (2017). *Kurattiyaru,* Chennai, Kizhakku Pathipagam,
5. Paneerselvam, Manico, (2020). *Thonmuthukuravar – Alaivurum Vazhvu*, Chennai, Thadagam
6. Balathandayutham. (2018). *Kutraparambarai Sattam – Meelaivu*, Madurai, Karuthuppattrai.

# தமிழ்ச் சிறுகதைகளில் குறவர்களின் வாழ்வியல்

**முனைவர் ந. இரத்தினக்குமார்**
உதவிப்பேராசிரியர், மதுரைக்கல்லூரி
மதுரை, தமிழ்நாடு, இந்தியா

***ஆய்வுச் சுருக்கம்***
*வரலாற்றின் திசைகளில் அடித்தளச் சமூகமாக்கப்பட்ட குறவர்களில் பல பிரிவுகள் இருந்தாலும், வெகுஜனச் சூழலில் நரிக்குறவர்கள் பெற்ற கவனம் பூர்வீகக் குறவர்குடிகள் பெறவில்லை. இந்நிலை தற்போது சற்றுமாறியுள்ளது. பல்வேறுபட்ட பூர்வீகக் குறவர் இனத் தொகுதிகள் சமீபமாக உரையாடல் வெளிக்குள் வந்து கொண்டிருக்கின்றன. இணையச் சூழல் இதைச் சாத்தியப்படுத்தி வருகிறது. பிற இனக்குழுக்களோடு ஒப்பிடும் போது குறவர்களின் பாடுகளும் வாதைகளும் கடும் துயர்மிக்கவை.*

***திறவுச்சொற்கள்:*** *பன்றிப்பட்டி, இனவரைவியல், மற்றமை, கதையாடல், மணிப்படுக்கை.*

## முன்னுரை

தமிழ்ச் சிறுகதை வெளியில் இனக்குழுக்களைப் பதிவு செய்வது என்பது புதுமைப்பித்தனிலே தொடங்கினாலும் இரண்டாயிரத்திற்குப் பின்பு “இனவரைவியல்”, “தலித்தியம்”, “பின்காலனியம்” பரவிய பின்பு இனக்குழுக்கள் மீதான கவனம் சற்று அதிகரித்துள்ளது. தலித் இலக்கியங்கள் ஏற்படுத்திய களம், பின்காலனியத்தின் அடையாளம் சார்ந்த உரையாடல்கள், வட்டார எழுத்தின் பரவலாக்கம் போன்ற காரணங்களால் தமிழ்ப் புனைவு வெளியில் பூர்வீகக்குடிகள், வளிம்புநிலையினர், அலைகுடிகள், பரதவர்கள் என பதிவுசெய்யும் போக்கு தற்போது விஸ்தரிக்கப்பட்டு வருவதைப் பார்க்க முடிகிறது. இப்போக்கில் குறவர் குடிகள் பற்றிய சிறுகதைகளை, இக்கட்டுரை ஆய்விற்கு எடுத்துக்கொள்கிறது.

## பழங்குடிக் குறவர்களும் அலைகுடிக் குறவர்களும்

மானிடவியல் குறவர்களை பழங் குடிகளாகவும் அலைகுடிகளாகவும் தனித்து அணுகுகிறது. மலையை ஆதாரமாகக் கொண்ட குடிகளாகக் குறவர்கள் பண்டைக் காலத்திலிருந்து தொடர்ச்சியாகக் குறிப்பிடப்பட்டு வருகின்றனர் இவர்கள் பழங்குடிக் குறவர்கள். மலையும் மலை சார்ந்ததுமாகிய குறிஞ்சி நிலக்குறவன் வேடனாக இருந்தான். முத்தாலான மாலையை அணிந்து, தலைமுடி மீது இறகை அணிந்து, புலியினது தோலை இடுப்பில் கச்சையாக ஒன்றின் மேல் ஒன்றாக இறுக்கிக் கட்டி, அம்பாறாத்துணியைத் தோளில் தொங்கவிட்டுக் கட்டி, வளரிச் சிறுகம்பையும் எடுத்துக் கொண்டு பறவைகள் பிடிக்கும் கண்ணிகளோடு தோற்றமளித்தைக் குற்றாலக் குறவஞ்சி (சிங்கனும் சிங்கியும், பாடல் - 2) காட்டுகிறது. வேட்டைச் சமூகமாக இருந்த குறவர்கள், தினைமாவு சேகரித்துக் காய்கனிகளை, கிழங்குகளைத் தேடி உண்டு வாழ்ந்து வந்ததைப் பழம் இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன. குறவர்கள் தொகுதிக்கேற்பவும், தங்களின் வாழிடச் சூழலைப் பொறுத்தும் வேட்டையாடுவது, மூங்கிலால் முரம், பாய், கூடைசெய்வது, பச்சை குத்துவது, குறிசொல்வது, தினிக்கப்பட்டத் துப்புரவுப்

பணி எனப் பல்வேறு தொழில்களை இன்று செய்து வருகின்றனர்.

குறவர்களின் வாழ்வில் குறிசொல்லுதல் முக்கியப் பண்பாடு. முருகனை வணங்கியே குறிசொல்லத் தொடங்குகின்றனர். உடற்குறி, கைக்குறி, விழிக்குறி, சொற்குறி போன்ற பல குறிகள் இருந்தன. இதைப் பின்புலமாகக் கொண்டு "குறவஞ்சி" எனும் இலக்கியம் தனித்த வகையாகத் தோன்றி அது பின்பு "குறவஞ்சி நாடகமாக" மாறியதெல்லாம் வரலாறு. "தஞ்சைவெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி", "குற்றாலக் குறவஞ்சி" ஆகிய நூல்களில் மலைவளம், குறி சொல்லும் அழகு, தினைப்புனம் விதைத்தல், காத்தல் போன்ற தொழில்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறவர்களின் சமயவாழ்வு விரிவானது. வெவ்வேறு நம்பிக்கைகளால் ஆனவை. வள்ளி, முருகனை மூலாதாரமாகக்கொண்டாலும் நடைமுறையில் இன்று பல்வேறு வழிபாட்டு மரபுகளைப் பின்பற்றி வருகின்றனர். முன்னோர் வழிபாடு, அம்மன் வழிபாடு, மலையுறை தெய்வம், நிமித்தம், சடங்குகள், வள்ளியாடல் எனப் பல அம்சங்களைத் தமிழ்க் குறவர்களின் சமயக்கூறுகள் உள்ளுறையாகக் கொண்டுள்ளன.

அலைகுடிகளான நரிக்குறவர்கள் வட இந்தியாவின் ஆரவல்லி மலைத்தொடர், மேவார், குஜராத் ஆகிய பகுதிகளிலிருந்து புலம்பெயர்ந்து தமிழகத்திற்குக் குடியேறிவர்கள் என்கிறார் பத்மாபாரதி. (பக்தவத்சலபாரதி, 2017, ப.231) நரியினைப் பிடித்து அதன் இறைச்சியை உண்டு, எஞ்சியபல், தோல், நகம், முதலியவற்றை விற்பதால் நரிக்குறவன் என்றும் குருவிகளைப் பிடிப்பதால் இம்மக்களை குருவிக்காரன் என்றும் குறித்தனர் (வானமாமலை, நா. 2018, ப.75). கர்நாடகத்தில் "அக்கிபிக்கி" என்றும் ஆந்திராவில் நக்கில்ல என்றும் அழைக்கப்படுகிறார்கள். பொருளாதாரத்திலும் கல்வி, வேலைவாய்ப்பிலும் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். வெகுசன மக்களால் பெரிதும் அறியப்பட்டவர்கள். அலைகுடிகளாக இந்தியா முழுவதும் அலைந்து திரிபவர்கள். வாக்ரி போலி, லம்பாடி, மராத்தி, குஜராத்தி, ஹிரானியம் போன்ற வட மொழிகளில் ஒன்றைப் பேசுவதோடு, தங்கள் வாழும் மாநிலத்திற்குரிய மொழியையும் கற்றுக்கொண்டு பல மொழி அறிந்தவர்களாக இருக்கின்றனர். ஆய்வாளர் கோ. சீனுவாசவர்மா, கோத்தர், தோடர், படகர் போன்ற மலைவாழ் பழங்குடி மக்கள் திராவிட மொழிக் குடும்பத்தில் உள்ளடங்கிய மொழியினைப் பேசும்பொழுது, நரிக்குறவர்கள் மட்டும் லம்பாடியினைப் போன்ற இந்திய - ஆரிய மொழிக் குடும்பத்தில் உள்ளடங்கின ஒரு மொழியினைப் பேசுவது அவர்கள் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் வாழ்ந்தவர் அல்லர் என்பதை வெளிப்படுத்தும் என்கிறார் (வானமாமலை, நா. 2018, ப.75) .

நரிக்குறவர்களிடம் பெரும்பாலும் குறி சொல்லும் வழக்கம் இல்லை. ஆனால், பிற்காலத்தில் வாழ்வியல் நெருக்கடியின் பொருட்டுசிலநரிக்குறவரும்குறிசொல்லும் வழக்கத்தை உருவாக்கிக் கொண்டனர். இந்தியா முழுவதும் விரவிக் காணப்படுபவர்களாகவும் வெவ்வேறு நிலங்களில் பயணிப்பவர்களாகவும் இருக்கின்றனர். பல மொழி அறிதலும் நாடோடி வாழ்வும் இதற்கு முக்கியக் காரணங்கள். எட்கர் தர்ஸ்டன் புகைவண்டி பாதைகள் நாடெங்கும் பரவிய பின் இவர்களும் அதைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாயினர் என்கிறார். (எட்கர்தர்ஸ்டன், 2010, ப.574). நரிக்குறவர்களின் பண்பாட்டு நடவடிக்கைகள் தமிழ்க் குறவர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவை. குறவர் குடிகளுக்கும் நரிக்குறவர் குலங்களுக்கும் பண்பாட்டு அடிப்படையிலும் வரலாற்றின் அடிப்படையிலும்

எந்தத்தொடர்பும் இல்லை. தமிழ்க் குறவர்கள் பன்றி வளர்த்தல், கூடை முடைதல், குறிசொல்லுதல், அம்மி கொத்துதல், வேட்டையாடுதல், கைவினைத் தொழில் மேற்கொள்ளுதல், முறம் கட்டுதல், பச்சை குத்துதல், மாறு தயாரித்தல், நிரைமேய்த்தல், துப்புரவுப்பணி மேற்கொள்ளுதல் எனப் பல தொழில்களை பிற்பற்றி வருகின்றனர். அலைகுடிகளான நரிக்குறவர்கள் நாடோடியாகச் செல்லும்பொருட்டே தங்கள் தொழில்களை அமைத்துக் கொள்கின்றனர். நரிக்கொம்பு விற்பது, பாசிமணிகள் விற்பது, வேடிக்கைகள் நிகழ்த்தி யாசகம் பெறுதல் போன்ற பின்புலங்களிலே இவர்களின் தொழில் அமைகிறது. உடல் அமைப்பிலும் தோற்றத் தொன்மக் கதைகளிலும் இருவருக்கும் வேறுபாடுகள் உண்டு. குலங்களும் வகைகளும் மட்டுமல்ல, வழிபாடுகள், நம்பிக்கைகள், சடங்குகள் எல்லாம் வேறுபட்டவை. குறவர்களின் பண்பாட்டு அசைவாக்கங்கள் என்பது பண்டையத் தமிழர் பண்பாட்டின் ஒரு பகுதி. நரிக்குறவர்களின் பண்பாட்டு வெளிகள் என்பது பெரும்பாலும் வடக்கின் தொடர்ச்சி.

**தமிழ்ச் சிறுகதைகளில் குறவர்களின் வாழ்வியல்**

சமூகத்தில் காணப்படும் விளிம்புநிலை மக்கள் குறித்த கதைகளை, புதுமைப்பித்தன் தொடங்கி (தெருவிளக்கு) வைக்க, அதை, சி.சு. செல்லப்பா (பந்தயம்), கு.ப.ரா. (பன்னைச் செங்கான்), கு. அழகிரிசாமி (திரிபுரம்), ஜெயகாந்தன் (எங்கோ-யாரோ-யாருக்காகவோ), ஜி. நாகராஜன் (மிஸ்பாக்கியம்), கி.ராஜநாராயணன் (கோமதி, பேதை) என அடுத்தகட்டத்திற்குக் காத்திரமாக நகர்த்தினர். பிச்சைக்காரர்கள், நாடோடிகள், அடித்தள மக்கள், பாலியல் தொழிலாளிகள், தன் பாலினத்தார், பிறழ்வாளர்கள், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள், நோயாளிகள், திருடர்கள் என நவீனத்துவக் கதைகளில் மற்றமைகள் (others) இடம் பெற்றது சூழலின் விளைவு. இருந்தபோதும் நவீனத் தமிழ் இலக்கியம் தொடங்கி நூறாண்டுக்குப் பிறகும் சிறுகதை, நாவல் இலக்கியங்களில் அருந்ததியர், குறவர்களுக்கான தனித்த இடம் குறைவுதான். கதையின் சில பகுதிகளில் பலர் கவனப்படுத்தியுள்ளதை மறுப்பதற்கில்லை. சான்றாக, கு. ப. ராவின் "அர்ச்சனை ரூபாய்" எனும் கதையில் புயலிற்குப் பின்னர் இடம்பெறும் தோட்டியின் வருகையும் அவரது அறம்சார்ந்த தனிவாழ்வும் கதையைப் பிறிதொரு தளத் திற்குக் கொண்டு செல்கிறது. இதுபோன்று நவீனத்துவக் கதைகளில், சிலவற்றைத் தேடி வாசிக்கமுடியும். மேலும் தொடக்க காலச் சிறுகதைகளில் குறவர், அருந்ததியர், பிடாரன், சாட்டையடிக்காரர், கழைக்கூத்தாடிகள் போன்றோர்க்கிடையே வேறுபாடற்று எழுதப்பட்ட நிலையையும் பார்க்க முடிகிறது. சிறந்த உதாரணம் பிரமிளின் காடன் கண்டது.

பின் நவீனத்துவம், பின் காலனியம், தலித்தியம், இனவரைவியல் கூறுகள் புனைவு வெளிக்குள் வரத்தொடங்கிய பின்பே விளிம்புநிலை இனக்குழுக்கள் தம்முடைய எல்லைகளை அதீதமாக விஸ்தரித்துக் கொண்டன. இன வரைவியல் துல்லியங்களும் கதைகளில் ஓரளவிற்குத் துலங்கின. குறிப்பாக அடுத்த தலைமுறைப் படைப்பாளிகளான வண்ணநிலவனின் பாம்பும் பிடாரனும், பூமணியின் ஓதுக்கம் (தோட்டி), கோணங்கியின் கோப்பம்மாள் (வண்ணார்), ஜெயமோகனின் சவுக்கு (சாட்டையடிக்காரர்), எஸ். ராமகிருஷ்ணனின் (பிடாரனின் மகள்), இமையத்தின் ஊர்க்காலி மாடுகள் (அருந்ததியர்), கண்மணிக் குணசேகரனின் சமாதானக் கறி (தொம்பர்), பவா செல்லத்துரையின் வேட்டை, பச்சை இருளன், சு. வேணுகோபாலின் திசையெல்லாம் நெருஞ்சி (நாவிதர்),

முருகபூபதியின் சின்னமனூர் சர்க்கஸ் காரி போன்ற கதைகளில் இவற்றைக் காணமுடியும். பாரதி பாண்டிச்சேரியில் வாழ்ந்தபோது தோட்டி ஒருவரோடு கொண்டிருந்த நட்பை வைத்து பாரதி வசந்தனின் "தம்பலா" எழுதப்பட்டுள்ளது. குறவர்களுக்கு இணையான, பிற இனக்குழுக்கள் குறித்த பதிவுகளாகவும் அலைகுடிகளின் கதைகளாகவும் இவற்றைக் கருத முடியும். குறவர்கள் குறித்த நேரடியான கதைகளாகப் பிரமிளின் காடன் கண்டது (கணையாழி, 1982), தமிழ் ஒளியின் குற்றப் பரம்பரை (உயிரோவியங்கள், 1989), அபிமானியின் ஆட்டம் (பனைமுனி, 1988) அறிவு மதியின் அடமானம் (மண் இதழ், 1999), உதயசங்கரின் தூரம் (பிறதொருமரணம், 2009), என். ஸ்ரீராமின் கொம்பூதிகள் (என். ஸ்ரீராமின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள்), தூயோனின் முகம் (இருமுனை, 2019) போன்றவற்றைக் குறிப்பிடலாம். வாசிப்பின் நினைவுகளிலிருந்து திரட்டியது இவை. கூர்ந்து தேடினால் இன்னும் அதிகரிக்கலாம். விரிவின் எல்லை கருதி இவற்றை மட்டும் இங்கு விவாதிப்போம்.

பிரமிளின் காடன் கண்டது -கணையாழியில் வந்த கதை. காடன் என்றால் வேடன் என்று பொருள். வேடன் ஒருவனின் நகர்சார் நெருக்கடி நிலையே கதையின் மையம். யாருமற்ற அத்துவான வெளியில் பிணத்தைப் பார்த்த காடன் காவல்துறையினரிடம் முறையிட, காவல்துறை அவனையே குற்றவாளியாக மாற்ற முயற்சிக்கிறது. தப்பிய காடன் தனது கூட்டாளியிடம் அந்த வட்டாரத்தில் நடக்கும் கஞ்சா கைம் மாறுதல்களையும் அதற்குப் பின்னணியாகக் காவல்துறையினர் சிலர் இருப்பதையும் கதைக்கிறான். பச்சைக்கைலி அணிந்த ஒருவன் இதை முன்னரே அறிந்திருந்ததால் கொல்லப்படுகிறான். வேடன், பிடாரன், சுக்கான் மூவரும் சமூக அமைப்பில் உதிரியாக வலம் வருகின்றனர். அவர்களின் வேட்டைத் தொழிலும் நாடோடி வாழ்வும் அவர்களைக் குற்றவாளிகளாக்கப் பார்க்கிறது. காவல்துறை பிடாரனிடம் கேட்கும் கேள்விகள் நாடோடிகளின் அடிப்படை வாழ்வைச் சிதறடிப்பவை. நீங்க ஏண்டா ஓணான், நாயி, பூனையைத் திங்கிறீங்க? ஆடு மாடு இல்லியா? அதுக்கேதுங்க பைசா?"ன்னேன். கொஞ்ச நேரம் பேச்சில்லே, அப்புறம் மெதுவா கேள்வி. நீ எப்படா கடேசி வாட்டி மலைக்காடு பக்கமாய் போனே? எனக் கேட்கத் தப்பிப் பிழைக்கிறான், பிடாரன் (பிரமிள், 2010). குறவர் எதிர்கொள்ளும் நகரத்தின் அழுத்தத்தைப் பிரமிள் தத்துவார்த்தமாக உரையாடுகிறார். சு. வேணுகோபால், கஞ்சா பயிரிட்டு அதனை ஊருக்குள் விற்பனை செய்து கொண்டிருக்கும் போக்கிரிகள் பற்றித் தெரியாமல் அந்த காட்டுக்குள் அணில் வேட்டைக்குச் சென்ற குறவர்கள் மாட்டிக் கொண்டு உதை வாங்குவதையும் போலிஸ், வெள்ளை வேட்டி, பணக்காரர், கடத்தல் காரன் எல்லாம் சேர்ந்து தகவல் சொன்னவனைக் கொல்கிற ஆதிக்கத்தையும் பிரமிளின் "காடன் கண்டது" சொல்வதாகக் குறிப்பிடுகிறார். (செல்வக்குமார்,மு. 2018, ப.187).

பத்தொன்பதின் முற்பகுதியில் ஏற்பட்ட பஞ்சமும் நிலமற்ற நாடோடி வாழ்வும் குறவர்களின் வாழ்வைச் சிதறடித்தது. பல்வேறு மறைமுகத் தொழில் சார்ந்து வாழ நிர்பந்திக்கப்பட்டனர். ஆங்கிலேய அரசு 1871இல் இந்தியாவில் குற்றப்பரைம்பரைச் சட்டத்தைக் கொண்டுவந்தது. சென்னை ராஜதானி 1911 இல் நடைமுறைப்படுத்தியது. தொடக்கத்தில் பிரமலைக் கள்ளர்கள், ஒட்டர், குறவர் போன்றவர்களைக் குற்றப்பழங் குடிகளாக அறிவித்தனர். பின்னால் 1930களில் கமுதி ஆப்ப நாட்டு மறவர்கள், பன்றிக் கறி உண்பதால் வெள்ளியங்குப்பம் படையாச்சிகள் உள்பட அறுபதுக்கும் மேற்பட்ட சாதிகளுக்கு

இச்சட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இருபதுக்கும் மேற்பட்ட குறவர்கள் இச்சட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டார்கள். காவல், உப்பு வியாபாரம் எனப் பிரதேச எல்லைகளற்று தொழில் செய்து வந்தவர்களைக் குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டுப்படுத்தியது காலனியம். ஆண்கள் இரவுநேரத்தில் காவல் நிலையத்திற்குச் சென்று கைரேகை வைக்கவேண்டும். வெளியூர் செல்வதாக இருந்தால் "ராத்தாரிச் சீட்டு" டன் செல்ல வேண்டும். குற்றப்பரம்பரைச் சட்டத்தின் சாரம்சம் இது. (முகில் நிலவன், 2010, குற்றப்பரம்பரை அரசியல் - பெருங்காம நல்லூரை முன் வைத்து) 1921 இல் மதுரைப் பெருங்காம நல்லூரில் பிரமலைக்கள்ளர்கள் கைரேகைச் சட்டத்தை எதிர்த்துப் போராடினர். ஆங்கிலேய அரசு துப்பாக்கிச் சூடு நடத்தி மக்கள் போராட்டத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்தது. இதைத் தொடர்ந்து இடதுசாரி, பார்வர்டு பிளாக் தலைவர்கள் இச்சட்டத்தை நீக்கக்கோரி அரசியல் போராட்டமாக முன்னெடுக்க இச்சட்டம் 1947இல் நீக்கப்பட்டது. ஆனால், இவற்றின் தாக்கம் இன்றுவரை தொடர, இந்தச் சட்டம் உருவாக்கிய காலனிய மதிப்பீடுகளே காரணம். குற்றப்பரம்பரைச் சட்டத்தில் குறவர்கள் என்ற சமூகப்பிரிவினர் ஏற்கனவே இருந்த ஒரே காரணத்தினால் திருட்டு வழக்குகளை எளிதாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நீக்கப்பட்ட மேற்காணும் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமாக அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிறது என மணிகோ. பன்னீர்செல்வம் குற்றம் சாட்டுகிறார். இந்நெருக்கடியைத் தமிழ் ஒளியின் குற்றப்பரம்பரை பொருண்மையாகக் கொண்டுள்ளது.

கணக்குக் காட்ட, பொய் வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறையில் கிடக்கிறான் குப்பன். அவனது மனப்போராட்டம் வழி, குறவர்களின் மேல் மூன்றுதலைமுறையாகத் தொடரும் குற்றப்பரம்பரைச் சட்டத்தின் கொடுமையைச் சொல்கிறது. அவன் தகப்பன் பெரிய குப்பன், குடித்துவிட்டு அட்டகாசம் செய்தான். பெரிய குப்பனின் முப்பாட்டன் ஒரு கோழிக் குஞ்சைப்பிடித்து விட்டான். இத்தகைய காரணங்களால், இந்தக் குலம், அவர்களின் பரம்பரை, குற்றப் பரம்பரையாகத் தீர்மானிக்கப்பட்டது (தமிழ்ஒளி, 1989, ப. 45) மதுரை மாவட்டத்தில் வாழும் பிரமலைக்கள்ளர் ஒருவர் தன் மகளைக் கப்பலில் ஏற்றி வழியனுப்பி வைக்க நாகபட்டினம் செல்கிறார். நாகபட்டினத்தில் வைத்து அவர் கைது செய்யப்படுவதை சி. சு. செல்லப்பா கதையாக (குற்றப் பரம்பரை) மாற்றியிருப்பார். சு.வெங்கடேசனின் காவல் கோட்டம் இதை விரிவாக எடுத்துரைக்கிறது. குப்பனது பாட்டன் இரவு நேரம் தாணாவில் (மணிப்படுக்கை) தங்குவதற்குச் செல்லும் போது இடி மழையில் காவல்நிலையம் தெரியாது தொலைந்து விடுகிறான். மறுநாள் மழைவிட்டது. வெள்ளம் வடிந்தது. போலிஸ்காரர்கள் படையெடுத்து வந்து கிழவனைத் தேடினார்கள். பெரிய குப்பனை அடித்து உதைத்து விவரம் கேட்டார்கள். இறுதியில் கிழவன் எங்கேயோ ஓடிவிட்டதாக முடிவுகட்டி அவனுக்கு வாரண்டு பிறப்பித்தார்கள். கிழவனின் பிரேதம், தாழங்காட்டின் ஓரத்தில், மரத்தின் வேர்களுக்கிடையில் சிக்கிக்கொண்டு கிடந்ததாக, மறுநாளே கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், "வாரண்ட்" உத்தரவு ரத்தாகவில்லை.

அது பெரியகுப்பனுக்கும் அவன் மகனுக்கும் ஏன் அவர்கள் சந்ததி முழுமைக்குமே நீடித்திருக்க வேண்டும் என்றும் பெரிய மனதுடன் போனால் போகிறதென்று விட்டுவிட்டார்கள். வெள்ளைக்காரன் போய்விட்ட பிறகு குற்றபரம்பரைச் சட்டமும் போய்விட்ட தென்று வாய்ப்பேச்சில் சொன்னார்கள். ஆனால் நடப்பதென்ன? (தமிழ்ஒளி, 1989, ப. 50). காவல் நிலையத்தில் உள்ள சிறையில் கிடக்கும் சின்னக்குப்பன் பெட்டிக்குள்

அடைபட்ட பாம்பைப் போல், பெருமூச்சு விட்டபடி வாழ்வினை அசைபோடுகிறான். தனது மனைவி தாயாகப் போகும் மகிழ்ச்சி ஒரு புறம் என்றால் மேலும் குற்ற பரம்பரையில் சேர்க்க ஓர் உருப்படி?, ஒரு இனத்தையே பிறப்பால் குற்றவாளிகள் எனச் சட்டம் சொல்கிறது? என மனம் அரற்றுகிறது. பாம்பு கூட புற்றில் உறங்க உரிமை உண்டு. ஆனால், நான், மனைவி, மக்கள்?... குப்பனுடைய இதய ஆழத்தில் எழும் கேள்வி கதையில் முதன்மையானது. மனைவியையும் புதிதாகப் பிறந்த குழந்தையையும் பார்க்க நினைக்கிறான் குப்பன். நீ, குற்றப்பரம்பரையைச் சார்ந்தவன். உனக்கு உன் இஷ்டப்படி வாழ எதுவும் உரிமை கிடையாது (தமிழ்ஒளி, 1989,ப. 52) என்கிறது மனக்குரல். இறுதியில் காட்டுப் புதர்களைப் பிளந்து செல்லும் வேடனின் அம்பைப் போல் மின்னல் ஒளியில் மழையைப் பிளந்து கொண்டு அவன் ஓடினான் (தமிழ் ஒளி, 1989,ப. 53) எனக்கதை முடிகிறது. சட்டத்தினால் மனிதன் அடையும் அவமானங்கள் தலைமுறைகளாகத் தொடர்வதைச் சொன்ன அரிய கதையாகத் திகழ்கிறது தமிழ் ஒளியின் குற்றப்பரம்பரை. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அருப்புக்கோட்டைக்கு அருகில் உள்ள "வதுவார் பட்டியில்" வாழ்ந்த குறவர்கள் மீது குற்றப் பரம்பரைச் சட்டம் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதை ஒப்பிடும்போது கோவை வட்டாரத்தில் சட்டத்தின் நடைமுறைக் குறைவு தான். ஆவணங்களும் பெரிய அளவில் கிடைக்காத போதும் இக்கதை நுட்பமாக எழுதப்பட்டிருப்பது சிறப்பான ஒன்று.

அறிவு மதியின் (அடமானம்) (மண் இதழ், 1999) எனும் சிறுகதை சில குறவர் இனத் தொகுதிகளில் காணப்பட்ட பழைய வழக்காறுகளைப் பேசுகிறது. மேலப்பாலையூர், தொழுவூர் பகுதிகளில் வாழ்ந்த சில குறவர்களிடையே தங்கள் மனைவியரை அடமானம் வைத்த வழக்கம் அரிதாக நிலவி வந்தது. வளப்பமில்லா கடும் வறட்சி நிலையே குறவர்களின் இச்செயலுக்கு காரணம் என்கிறார் மணி.கோ. பன்னீர் செல்வம் (2009, ப.28). இவ்வழக்கம் தற்போது அறவே வழக்கொழிந்துவிட்டது. ஒரு காலகட்டத்தில் நடந்த வழக்காறில் மனித உறவுகளுக்கிடையே நடக்கும் சிக்கல்கள் அளப்பறியவை. மாசாணம் தன் மனைவி செடிசேம்புவை வறுமை காரணமாக, செங்கானிடம் ஒரு மாதம் அடகு வைக்கிறான். பன்றிப்பட்டியின் வீழ்ச்சி காரணமாக ஒரு மாதத்தில் திருப்ப இயலவில்லை. பத்து மாதம் கழித்தே அவளை மீட்கிறான். பத்து மாதத்தில் செடிசேம்புவும் செங்கானும் ஆத்மார்த்தமாகக் காதல் கொள்கின்றனர். கடுமையாக உழைக்கும் மாசாணம் ஒரு புறம். யாருமற்ற அனாதையான, அதே சமயத்தில் உயர்ந்த பண்புகள் கொண்ட செங்கான் இன்னொருபுறம் என முக்கோணக் காதலாகக் கதை மாறுகிறது. இருவரின் மீதான பற்றுதலால் உழலும் ஒரு பெண்ணின் உளப்போராட்டம் மையம். செடிசேம்பு உடும்பைச் சமைத்து செங்கானுக்குத் தர, அவளின் கைப்பக்குவத்தால் விளைந்த அபரிமிதமான சுவையை உணரும் செங்கான், உண்ணமுடியாமல் தடுமாறுகிறான். வருடமெல்லாம் சாப்பிட்ட மாசாணம் எந்த அளவிற்குத் துன்பப்படுவானென்ற குற்ற உணர்வால், உடும்பு இறைச்சியைச் செடிசேம்புவிடமே கொடுத்து அவள் கணவனுக்குக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, இருந்து வா, என்கிறான். அடமானத்தின் மீதும் இனக்குழுக்களுக்கு உடமையற்ற பண்பே இருக்கும் என்பதாக இதை எடுத்துக் கொள்ளலாம். ஆற்றை நீந்திக் கடந்து உடும்புக்கறி கொண்டு வந்த மனைவியை இப்படி வருவது முறையல்ல. நான் மீட்ட பின்பே, நீ இங்கு வரவேண்டும் என்று திருப்பி அனுப்புகிறான் மாசாணம். ஆற்றின்

ஒரு கரையில் செங்கான். மறுகரையில் மாசாணம். காட்டாறைக் கடந்து இருவரையும் சந்திச்சு வரும் செடிசேம்பு. இரண்டு ஆண்கள் ஒரு பெண். இரண்டு கரை, ஒரு நதி. நான்கைந்து இரவுகள். உணர்ச்சிகரமான காதல் கதை. காட்டாற்றை நீந்தும்போது நாய்க்குட்டியும் அவளோடு நீந்துவது செடி சேம்புவின் ஆழ்மனத் தத்தளிப்பாகக் கருத இடமுண்டு. மாசாணம் மனைவியை மீட்டிய பின்பும் செங்கானும் செடி சேம்புவும் சந்திக்காமல் இருக்கமுடியாத பதற்றம், இதை அறியும் மாசாணம் கொள்ளும் தவிப்பு, மூர்க்கம் என மூவரின் உளப் போராட்டம், இயல்பாக வந்துள்ளது. கதையின் இறுதியில் செங்கானைச் சந்தித்து விட்டு இரவில் நீந்தி வரும்போது நாயும் அவளோடு நீந்தி வருகிறது. கரையேறியவள் ஈரச் சேலையை அவிழ்த்துச் சுற்றிவிட்டுத் திரும்பிப் பார்க்கிறாள். நிலவொளியில் செங்கான் அக்கரையில் நின்று கொண்டிருக்கிறான். இக்கரையில் மாசாணம் உழைப்பின் மிகுதியில் உறங்கிக் கிடக்கிறான். ஆற்றைக் கடந்து வந்து, செடிசேம்புவின் அருகில் நின்ற நாய் தனது உடலில் உள்ள ஈரத்தைச் சிலுப்ப நிலாத்துளிகள் உடலிலிருந்து தெறித்துச் சிதறுகின்றன. பன்றித் தொழுவங்களில் காதலும் அறமும் உண்டு என்று சொன்ன கதை. செடிசேம்பு கட்டியவனின் மீதான அன்பாலும் வறுமையின்போது வச்சு வாழ்ந்தவனின் காதலாலும் காட்டாறு போன்று சுழித்தோடுகிறாள். குறவர் வழக்கிற்கு மூவரும் கட்டுப்பட்டாலும் இயற்கை அதை மீறி மூவரையும் பாடாய்ப் படுத்துகிறது. பன்றிப் பட்டியும் தொழுவமும் பெருகுவது செங்கானின் காதலைத் தீர்மானிப்பதுபோல் அதன் வீழ்ச்சி மாசாணத்தின் காதலை அடமானமாக மாற்றுகிறது. பன்றிப் பட்டியின் பெருக்கம் காதலை, கௌரவத்தைக் குறவர்களுக்கு வழங்கும் என்கிறது கதை. பன்றிப் பட்டியின் வீழ்ச்சி குறவரின் பொருளாதார, பண்பாட்டு வீழ்ச்சியில் முடிகிறது. மூவரிடமும் காணப்படும் அறமே கதையை உயரத்தில் நிலைநிறுத்துகிறது. தஸ்தாவேஸ்கியின் "வெண்ணிற இரவுகள்", இரண்டு ஆண்கள், ஒரு பெண், ஒரு ஆற்றங்கரை, ஒருபாலம் என நகரும். இக்கதை அவற்றை நினைவுபடுத்துகிறது. ஓர் இனக் குழுவின் நெருக்கடியான வழக்காறை மையமிட்டு அவர்களின் புழங்கு வெளிகளான பன்றிப்பட்டி, ஆற்றங்கரை, குடிசைகள், கிழிசல் மனிதர்கள், தெரு நாய்களின் உசாவல்கள், சிற்றுயிர் வேட்டைகள் எனக் "கறுப்பு அழகியலாக" நகரும் இக்கதையின் சித்திரம் அற்புதமானது. பெருந்திரளின் காதல், கற்பு போன்ற ஒழுக்க மதிப்பீடுகளைக் கலைத்து அடுக்குகிறது "அடமானம்".

தென் மாவட்டங்களில் வாழும் ஒடுக்கப்பட்டோரின் பாடுகளைத் தொடர்ந்து எழுதி வரும் அபிமானியின் ஆட்டம் என்ற கதை (பனைமுனி) குறக்குடிகளின் கட்டற்ற கொண்டாட்டங்களைச் சாதியச் சமூகம், ஆடும் உரிமையைக் குற்றமாக்கி எங்களுக்குக் கீழ்தான் நீங்கள் என்பதை வன்முறையால் நிறுவுகிறது. திடீரெனக் கடல் பொங்கியது போலக் கூட்டத்தில் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டன. பெரும்புயலில் உத்தரவாதமின்றி சரிந்து விழும் மரம் செடிகளைப்போலக் கதிகலங்கிப் போனார்கள் சனங்கள். என்ன, எதனால் என்று தீர்மானிக்கமுடியாத திணறல், ஆட்டத்தைப்பற்றி இப்போது யாருக்கும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. பந்தலுக்குள் ஓடியவர்கள் பலவிதமாய் கூச்சலிட்டார்கள். அடில, வெட்டுல, எவ்வளவுத் திமிரிருந்தா உள்ள வந்து எல்லோரடவும் ஒட்டிக்கிட்டு இருப்பானுவ, அதைத் தொடர்ந்து, வேண்டாம் தொர போயிருதம் தொர (தேவராஜ், 2012) என்று பலிகடாவின் கெஞ்சல்கள் காற்றில் இறைஞ்சுகின்றன. எளிய குடிகளின் கெஞ்சல்கள், கேவுதல்கள் தீண்டாமையினால் உருவாகும் மீறல்களையும் உயிர் பதற்றத்தையும் காட்டுபவை.

கரிசல் வட்டார நகர் சார்ந்த நடுத்தர வர்க்கத்தின் வாழ்வியலைத் தமது கதைகள் மூலமாகத் தொடர்ந்து எழுதி வருகிறார் உதயசங்கர். அவரின் தூரம் (பிறிதொருமரணம்) குறவர்களின் புலம் பெயர் நெருக்கடிகளை கதையாக்கம் செய்துள்ளது. பசியிலிருந்து குறவர்கள் தப்பிக்க இடப்பெயர்வு உதவுகிறது. அவர்கள் ஆறுபேர், ரெண்டு பன்னிக்குட்டி, ஒருகழுதை, காளி, அவன் பெண்டாட்டி குருவம்மா, காளியின் அப்பன் கலியன் இருபது மைல் கடந்த பிறகு வந்த காட்டுப் பாதை அது. (உதயசங்கர், 2009, ப.103) அதில் நடக்கும் சம்பவம் தான் கதை. நடக்க இயலாது கிழவன் மயங்கி மரணிக்கிறான். கிழவனை வீட்டில் விட்டு விட்டுச் செல்வதே திட்டம். ஆனால், காளிக்கு தாத்தன் முறை பிணைப்பு தடுக்க, அழைத்துச் செல்கிறார்கள். கடும் சுரத்தின் அலைவு, பசி மயக்கம், கிழவனின் மரணம் ஆகிய நெருக்கடிகளால் காளியும் குருவம்மாளும் கடுமையாகத் தாக்கிக் கொள்கின்றனர். தன்னிலை திரும்பிக் கிழவனைப் புதைத்துவிட்டுக் கழுதை, பன்றிக் குட்டிகளுடன் மீண்டும் நடக்கத் தொடங்குகிறார்கள். குறவன், குறத்தியிடம் பசிக்கிறாதா? எனக் காதலுடன் கேட்க, அவளும் வாஞ்சையுடன் தலையசைக்க, சப்பாணியின் கடையில் களவாடிய, பன்ரொட்டியைப் பகிர்ந்து கொண்டு, மிச்ச வாழ்வை நிறைவுசெய்ய, திசைகள் தேடிச் செல்வதாகக் கதை முடிகிறது. வீடு, நிலம், நிலையான தொழிலற்ற குறவர்களின் பெயர்வு உயிர் வாழ்தலின் அடிப்படையாக இருப்பதைக் கதை உரைக்கிறது.

என். ஸ்ரீராமின் 'கொம்பூதிகள்' எனும் சிறுகதை, வட்டார இசைக் கலைஞர்களுக்கும் குறவர் பெண்களுக்கும் உள்ள பரஸ்பர அன்பைச் சொல்ல விளைந்துள்ளது. காவடி எடுத்துக் கொடுமுடிக்குச் செல்லும்போது கொம்பூதிகள் ஊத, தாரை தப்பட்டைகள் முழங்க, குறவன் குறத்தி ஆட்டம் நடைபெறும். பழனிமலைக் குறவனுக்காக நடக்கும் பழமையான வழக்காறு இது. கொம்பூதி இறந்து விடுகிறான். கொம்பூத விருப்பமில்லாத மகன், நெய் ஏற்றி வட இந்தியா செல்லும் லாரிக்கு வேலைக்குச் செல்ல விழைகிறான். தாய், கொம்பூதும் பாரம்பரிய உரிமையை நிறுத்த மறுக்கிறாள். வேறு வழியின்றி, அவளே ஊதச்செல்கிறாள். இதனால் தனது முடிவை மாற்றிக்கொண்டு மகன் கொடுமுடி காவடியாட்டத்திற்குத் தந்தையைப் போன்று கொம்பூதுகிறான். நீண்ட காலமாக இது தொடர்கிறது. இதில் நடக்கும் குறவன் குறத்தி ஆட்டத்தில் சின்ன குறத்தி, சாந்தினியைச் சந்தித்துக் காதல் கொள்கிறான் கொம்பூதி. அடுத்த காவடியாட்டத்தில் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்து காத்திருக்கிறார்கள். செல்பேசியில் தொடர்ந்து காதலைப் பகிர்ந்துகொள்கிறார்கள். சூழல் நிர்பந்தத்தால் சின்ன குறத்தி, திருமணமாகி மூனு மாசம் முழுகாமல் இருப்பதால், ஆடவரவில்லை என்பதை அறிகிறான் கொம்பூதி. கொடுமுடி காவடி எடுப்பில், கொம்பூதிகளுக்குப் பதிலாக ட்ரம்ஸ் செட் வருகிறது. இம்மாற்றத்தால் கொம்பூதி, குறத்தி ஆகிய இருகலைஞர்களின் காதலும் கரைகிறது. காதலும் கைகூடல்லை பாரம்பரியத்தையும் பின்பற்ற முடியாத உளைச்சலில், கொம்பூதி வீட்டின் முன் வாசலில் அமர்ந்து, தூரத்து விளக்கொளியில் திளைக்கும் பழனிமலைக் குறவனைப் பார்த்து உச்சஸ் தாயியில் (முருகேசபாண்டியன், ந. 2019, ப.128) கொம்பை ஊதுகிறான். மலைக்குறவன் எனும் அடையாளம் பின் தள்ளப்பட்டு பெருஞ்சமயம் முன்னகர்த்தப்பட்டது போல வட்டாரக் கலைஞர்களுக்குப் பதிலாக டிரம்செட் முன் நகர்த்தப்படுகிறது. கைவிடப் பட்ட மலைக்குறவனும் கைவிடப்பட்ட கொம்பூதியும் இசையால் ஆத்மார்த்தமாக இணைகின்றனர். கொம்பூதி, குறத்தி என இரு வேறுபட்ட கலைஞர்களுக்கிடையே அரும்பும் மெல்லிய காதலைச் சொன்ன கதை. குறத்தியின் அகப்புறச் சூழலால்

உருவாகும் பிறழ்தலை மௌனமாகப் புனைந்துள்ளது கொம்பூதிகள்.

தூயோனின் “முகம்” - குறவர் காலனியில் புழங்கும் பன்றி இறைச்சி சார்ந்த அதிகாரப் போட்டியையும் வன்மத்தையும் களமாகக் கொண்டது. வன்மமும் ஆங்காரமும் நிறைந்த கதை. பாண்டியின் குரலில் அவனுடைய கதையைச் சொல்கிறது. நுண்தகவல்கள் புனைவை எப்படி வலுப்படுத்துகின்றன என்பதற்கு இக்கதை நல்ல உதாரணம். முற்றிலும் அறியப்படாத தோட்டிகளின் பன்றிவேட்டை சார்ந்த உலகத்தை நுணுக்கமாகச் சித்தரிக்கிறார் தூயோன். அங்கு நிலவும் அதிகாரப்போட்டியும், வன்மமும், குற்றத்தின் குறுகுறுப்பும் அது அளிக்கும் அகங்கார நிறைவும் எனப் பலவற்றைக் கதை உணர்த்துகிறது. (நரோபா, 2012)

## சிறுகதைகளும் அலைகுடிகளும்

தமிழகத்தில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட நரிக்குறவர்கள் வாழ்கிறார்கள் என்றும் அலை குடிகளாக அவர்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருவதையும் “ட்ரைபள் சொசைட்டி” ஒருங்கிணைப்பாளர் ஜெயசங்கர் போன்றோர் தொடர்ந்து முறையிட்டு வருகின்றனர். கல்வி, வேலை வாய்ப்பு, பாதுகாப்பான வாழ்க்கை என்பது நரிக்குறவர்களின் வாழ்வில் இன்று வரை கேள்விக் குறிதான். வீடற்ற அலை குடிகளின் அடையாள நெருக்கடிகள் நிலை வாழ்க் குடிகளைவிடக் கடுமையானவை. தென் மாவட்டங்களில் நெல்லை, தூத்துக்குடி, சிவகங்கை, காரைக்குடி, தேவகோட்டை பகுதிகளில் அதிகளவில் வாழ்கின்றனர். குறைந்தது ஐம்பதிலிருந்து நூறு குடும்பம் வரை உள்ளனர். பெரும்பாலும் மைதானம், பூங்கா, புறநகர், புதியபேருந்து நிலையங்களின் அருகில் எனக் கூடாரங்கள் அமைத்துள்ளனர். முன்பு போல் பாசி மணி விற்பனையும் குறைந்து வருவதால் வறுமை சூழ்ந்து வரும் நிலையில் இருப்பதைப் பார்க்கமுடிகிறது. பறவை, முயல் வேட்டை ஓரளவிற்குக் கை கொடுத்தாலும் கிடைக்காத நாள்களில் பலர் யாசகம் கேட்டு வாழ்ந்து வருகின்றனர். ரேஷன், அடையாள அட்டை இல்லாமல் பல புதிய குடிகள் தவித்து வருவதையும் பார்க்க முடிகிறது. இரவின் மரணம், நரிப்பல் போன்ற சிறுகதைகள் இவற்றைப் பதிவு செய்திருக்கின்றன. அலைகுடிகளான நரிக்குறவர்கள் குறித்த கதைகளாக ஜெக சிற்பியின் நரிக்குறத்தி, சோ. தர்மனின் இரவின் ஆட்டம், பிரேம் ரமேஷின் குருவிக்கார சீமாட்டி, இறையன்புவின் நரிப்பல் போன்ற கதைகளைக் குறிப்பிடலாம். தேடினால் இன்னும் கிடைக்கலாம்.

கரிசல் வட்டாரத்தில் வாழும் பல்வேறு விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலை உருளைக் குடி, கோவில்பட்டி வட்டாரங்களை வைத்து கதைகளாக எழுதி வரும் சோ. தர்மன், தென்மாவட்டங்களில் கணப்படும் சமகால நெருக்கடிகளை யதார்த்தமாகப் பதிவு செய்து வருகிறார். சூழல் நசிவை, பறவைகளின் அழிவை (சோகவனம்), நாட்டார் கலைகளின் சிதைவை, தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் மனிதர்கள் படும் துயர்களைத் தொடர்ந்து கள அனுபவத்திலிருந்து கதைகளாக வெளிக் கொணர்கிறார். நகரத்திற்குப் புதிதாக நரிக்குறவர்கள் வரும்போது திருடர்களாக மக்கள் அவர்களைக் கருதும் தப்பெண்ணமும் பாரம்பரிய வேட்டைத் தொழிலை நிகழ்த்த நரிக்குறவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் சோ. தர்மனின் “இரவின் மரணம்” பேசுகிறது. ஒரு நாடோடிச் சமூகம் வேட்டையை எப்படி எதிர்கொள்கிறது, அதற்கு அவர்கள் பின்பற்றும் அறம் எத்தகையது என்பதே மைய இழை. சினை முயலை வேட்டையாடுவதில்லை. மருந்துக்கு மட்டுமே காட்டுப்பூனை வேட்டையாடப்படும். தனிமனித

வாழ்வுக்கும் விலங்குகளின் வேட்டைக்கும் உள்ள தொடர்பினை உரையாடலாகப் பாலிசு, முன் வைப்பது முதுமையின் திரட்சி. வாழ்வின் போதாமைகளை, அறிவார்த்த நிலையிலிருந்து நரிக்குறவர் பாலிசு லாவகமாகப் பேசுகிறார். அதுவும் தனது நரிக்குறவருக்குரிய வட்டார மொழியிலிருந்து பேசுவது கதைக்குக் கூடுதல் நம்பகத் தன்மையை அளிக்கிறது. "எல்லாத்துக்கும் ஒரு நாள் சாவு, வேட்டைக் காரனுக்கு நித்தம் சாவு, என்கிறார் பாலிசு. தனித்துவமான கதாபாத்திர வார்ப்பு பாலிசு.

ரமேஷ் - பிரேமின் 'குருவிக்காரச் சீமாட்டி' ஊருக்குள் புதிதாக வரும் ஊசும்பி எனும் நரிக்குறத்திக்கும் சாந்தி எனும் செல்வந்தர் வீட்டுப் பெண்ணுக்கும் ஏற்படும் காலம் கடந்த நட்பைப் பேசுகிறது. நரிக்குறவர்களைப் பண்பாட்டுக் கடத்துநர்களாகக் காட்டுகிறது கதை. ஊருக்குள் நரிக்குறவர் கூட்டம் வருவதால் ஊரில் உள்ள ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் இடையே உடல் அளவிலும் மனதளவிலும் ஏற்படும் மாற்றங்களை நுட்பமாகச் சித்திரித்துள்ளது.

பெண்கள் தங்களின் பெண்மையை குறத்தியால் மீட்டெடுப்பதும் ஆண்கள் குறவர்களால் வேட்டைக்காரர்களாக மாறுவதும் சிறார்கள் குறவேஷம் கட்டுவதும் கிராமம் முழுவதும் வேட்டைக்கறியால் திருவிழாக் கோலம் அடைவதுமாக ஊர் புதுக்கோலம் கட்டுகிறது. குறத்தியின் வருகை கிராமங்களில் கொண்டாட்டத்திற்குரியதாகிறது. தெருப் பெண்கள் ஒன்று சேர்ந்து குறத்தியைக் கிண்டல் செய்ய குறத்தி பிற மொழியால் மறு மொழி சொல்ல சபை பரவச நிலையை அடைகிறது. எங்கள் ஊரைச் சுற்றி நீளும் குறும்புதர்க் காடுகளில் குறவர்களோடு எங்கள் ஊர்ப் பையன்களும் சுற்றித்திரிவார்கள். அம்மா சொல்லுவாள், ஆணும் பொண்ணுஞ் சேர்ந்து ஊரையே குறவன் குடியாஆக்கிடுதுங்க, இந்தக் கொறத்தி வூடு அடங்குறாளா பாரு (ரமேஷ் பிரேம், 2006, ப.6) எனத் தன் பெண்ணையும் குறத்தியாக்கிக் கொஞ்சும் மடைமாற்றத்தை ரமேஷ் - பிரேம் பேசியுள்ளனர். கதையில் சாந்தி மனச்சோர் வடைந்து வீட்டில் முடங்கிய நிலையடையும் போது, குறத்தியின் புதிய நட்பால் தலைவி உயிர்ப்புப் பெறுகிறாள். ஊசும்பி தன்னுள் உறைந்திருக்கும் மாயமோகினியைத் தலைவியால் கண்டெடுக்கிறாள். தலைவியும் ஊசும்பியும் மற்றொருவரின் அகப் புற வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்கிறார்கள். தலைவி ஆண்களை எதிர்கொள்ள தயங்கிய நிலையில் ஊசும்பி ஆண்களைத் தனது சேவகர்களாக மாற்றுகிறாள். மீறல்களின் நேசம் புறத்தளத்தில் முறிகிறது. ஊசும்பி பிரெஞ்சு சீமானைத் திருமண முடித்து தனது நாடோடி வாழ்வை உலகம் முழுவதற்கும் விஸ்தரித்துக் கொள்கிறாள். சாந்தி பெண்களுக்கானச் சேவகியாக, அவளது மகள் வள்ளி பழங்குடிகளுக்கானப் போராட்டக் களத்தில் இயங்க எனக் கதைத்தளம் கட்டமைக்கப்பட்டுள்ளது. குடும்பக் கட்டமைப்பிற்குள் உறைந்த போன பெண்மையை ஆற்றலுடையதாக மாற்றுவதோடு, ஒரு பெண் வம்சாவழியையே எப்படி சமூக வயப்படுத்துகிறாள் ஒரு நரிக்குறத்தி என்பதைக் கதை புனைந்துள்ளது.

குறிஞ்சிப் பாடியில் உள்ள பார்வதிபுரம் வாழ் நரிக்குறவர்களின் பொருளாதார நெருக்கடிகளை இறையன்புவின் 'நரிப் பல்' கதையாக்கியுள்ளது. நரிக்குறவர் சங்கத்தின் தலைவர் பழனியின் சமூகம் சார் முன்னெடுப்புகளும் அதில் ஏற்படும் சுயம் சார்ந்த பின்னடைவுகள் உருவாக்கும் தற்கொலையுமாகக் கதைப் பின்னப்பட்டுள்ளது. ஆட்சியருக்கும் நரிக்குறவர் சங்கத்தின் தலைவருக்கமான (பழனி) அணுக்கம் கதைச் சம்பவங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன.

பழனி தற்கொலை செய்வதற்கு முன்பாக ஆட்சியருக்குக் கொடுத்தனுப்பும் நரிப் பல் புனைவினை வேறொரு தளத்திற்குக் கொண்டு செல்கிறது. குற்றம் இழைக்கும் மற்றமைகளின் (others) மேல் அதிகாரத்திற்கு இருக்கவேண்டிய கருணையின் அவசியத்தை “நரிப்பல்” வலியுறுத்துகிறது. குறவங்க வாழ்க்கையில் தற்கொலை ரொம்ப சகஜங்க சார் (இறையன்பு, 2019, ப.74) என்ற குரல் அலை குடிகளின் பாதுகாப்பற்ற வாழ்வைக் காட்டுகிறது.

## தமிழ் சினிமாவும் அலைகுடிகளும்

1957இல் ஜெகசிற்பியின் நரிக்குறத்தி ஆனந்த விகடனில் இடம்பெற்று, பின்பு நரிக்குறத்தி எனும் தொகுப்பாக 1960 இல் வெளிவந்துள்ளது. தமிழ் சினிமாவில் அறுபதுகளில் நரிக்குறவர்களுக்கான இடம் அளப்பறியதாக இருந்ததைப் பார்க்க முடிகிறது. நாயகர்களைக் குறவன், குறத் தியாக்கி ஒரு பாடலையோ (நாங்க புதுசா.. - ஒளிவிளக்கு-1968) அல்லது குறவன் குறத்தி ஆட்டத்தை நாயகர்கள் பார்த்து ரசிக்கும் படியான ஒரு காட்சியையோ அமைத்து விடுவது வாடிக்கை (உ.ம். வசந்த மாளிகை - 1972). 1972இல் வெளிவந்த “குறத்தி மகன்” திரைப்படம் சிறந்த திரைப்பட்டத்திற்கான மாநில விருதை அந்தாண்டுப் பெற்றது குறிப்பிடத்தக்கது. அத்திரைப்படத்தில் இடம்பெற்ற குறத்திவாடி என் குப்பி என்ற பாடல் தமிழகம் முழுவதும் வலம் வந்தது. அன்று ஸ்டுடியோக்கள் பலவும் நரிக்குறவராக நடிப்பவர்களால் நிறைந்திருந்தது போலும். இச்சூழலை நரிக்குறத்தி பகடி செய்துள்ளது.

திண்டிக் கோடா, அவரின் தாயார், தம்பி மயிலங்கோடா, மனைவி வண்டிக்கோடி ஆகிய நால்வரும் சென்னையில், மக்கள் பரபரப்பாகச் செல்லும் ரஸ்தாவிற்கு அருகில் கூடாரமிட்டு பாசி, மணி விற்பனை செய்து வாழ்ந்து வருகின்றனர். பாசிகள் விற்கச் சென்ற தனது மனைவி வண்டிக்கோடி நீண்ட நேரமாகியும் திரும்பவில்லை. அதே நேரத்தில் சொகுசுக் காரில் ஒப்பனைகளுடன் நரிக் குறத்திபோவதாகமயிலங்கோடாசொல்லத் திண்டிக்கோடாப் பதறுகிறான். மூர்க்கமாகிக் கிழவியை அடிக்கிறான். பெட்டிக்கடைக்காரரிடம் திருமணமான ஆறு மாதத்திலே தன் மனைவி தன்னை விட்டு ஓடிப்போனாள் என அழுது புலம்புகிறான். தூரத்தில் குறத்தி வண்டிக் கோடி பாசி மணிகளோடு வருவதைப் பார்த்து ஆனந்த அதிச்சியடைகிறான். காரில் சென்றது சினிமா சூட்டிங்கிற்கான நடிகை என்பதைப் பின்பு அறிந்து கொள்கிறான். நரிக்குறவரின் வாகிரி மொழியிலே அமைந்த சிறுசிறு உரையாடல், நரிக்குறவரின் பண்பாட்டைச் சுட்டும் மாந்தர் பெயர்கள், உருவச் சித்திரிப்புகள் என நரிக்குறவரின் குழு அடையாளங்கள் நம்பகத் தன்மையுடன் ஜனரஞ்சமாகச் சொல்லப்பட்டிருக்கினறன. குறவர்கள் என்றாலே அது நரிக்குறவர்கள் தான் என்ற “நிலை நிறுத்தல்” சினிமா வழியாக நடந்தேறியது. பாரம்பரிய வேலன் வெறியாட்டு, குன்றக் குரவை, குரவைக் கூத்து போன்றவற்றை சினிமா குறவன் குறத்தி ஆட்டமாக மாற்றியது. அலை குடிகளின் அடையாளங்களைப் பேசிய இடைக்கால வெகுஜன சினிமா பழங் குடிகளின் வாழ்வியலைப் பேசவில்லை.

## தொகுப்புரை

“குறவர் குடிகளின் வேட்டை, காதல், வழக்காறுகள், புலம் பெயர்வுகள், பிறர் தொடுக்கும் மீறல்கள், பன்றிப் பட்டிகளின் வெகுமதி, பஞ்சாயத்துகளில் நடக்கும் சுரண்டல், ஆண், பெண்அடையும் தொழில்சார் நெருக்கடிகள், துரத்தும் தீண்டாமை எனக் கதைகள் பயணப்பட்டிருக்கின்றன. குறவர்கள் இன்று பல்வேறு அமைப்புகளாகவும் தனிக் கட்சிகள் சார்ந்தும் அரசியல் அதிகாரத்தை நோக்கி முன்னகர்ந்து வருகின்றனர். அலைகுடிகளின் பாடுகளும் துயரங்களும் தமிழ்ச் சிறுகதை வெளியில் முக்கிய

இடம்பெற்றுள்ளன. சோ.தர்மனின் இருளின் மரணம், ரமேஷ் - பிரேம் எழுதிய குருவிக்கார சீமாட்டி ஆகியவை சிறப்பான கதைகளாகும்.

"நவீனத்துவ எழுத்துகள் சிலவற்றில் இனக்குழுக்களின் அடையாளங்கள் பிற்போக்கானவையாக மதிப்பிடப்பட்டன. பன்றி கீழ்மையானதாக, அசுத்தத்தின் குறியீடாகப் பார்க்கப்பட்டது. "ஜார்ஜ் ஆர்வெலி'ன் "விலங்குப் பண்ணை"யில் அதிகாரத்தின் பிரதிநிதியாகப் பன்றியைக் குறியீடாக்கி, பன்றி கூட நிர்வாகத்தைச் சிறப்பாகச் செய்யும், ஆனால், சித்தாந்த வாதிகளுக்குத் தெரிவதில்லை எனப்பகடி செய்துள்ளது. பன்றியாகச் சபிக்கப்பட்ட முனிவரே ஆனாலும் (அருந்தவப் பன்றி) மீண்டும் மனிதனாக விரும்ப மாட்டார், பன்றி வாழ்வு பொறுப்பற்றது, கீழானது எனும் பொருள் தரும்படியாக "கவிதா தேவி அருள் வேட்டல்" கவிதையில் பாரதி எழுதியிருப்பார். அம்பை தனது கதைகளில் (ஒரு கட்டுக் கதை, காட்டில் ஒருமான்) பெண்ணின் அவலத்தைக் குறிப்பதற்கு பன்றியின் துயர வாழ்வை இணை வாழ்வாகக் காட்டியிருப்பதும் கவனிக்கத்தக்கது. காட்டில் ஒருமான் பழம் பறிக்கிறது, திடீர்னு ஒரு ஆளு வந்து பட்சிங்கள சுடுறது, ஓடுற பன்னியை அடிக்கிறது அதெல்லாம் இல்லாம இல்ல (அம்பை கதைகள், 2012, ப.358 ) என உரைக்கும். இவையெல்லாம் நவீனத்துவ எழுத்து மரபின் வெளிப்பாடுகள் எனலாம். ஆனால், இன்று தலித்தியம், இன வரைவியல் எழுத்துகள் பரவிய பின்பு விளிம்புத் திரள்களின் அடையாளங்கள் மிகுந்த பொருள் உடையனவாக இருக்கின்றன.

## முடிவுரை

குறவர் தொகுதிகள் பல இருந்தாலும் குறவர், நரிக்குறவர் என இரண்டே பிரிவினர் மட்டும் தொடர்ந்து படைப்புகளில் கவனப்படுத்தப்பட்டு வருவது பலதரப்பட்ட குறவர்களின் பன்முக வாழ்வியலைப் புறந்தள்ளும் ஒன்று. மானிடவியல் பன்மியம் காக்கப்பட வேண்டும் என்கிறது. பன்றிக் குறவர்களின் வாழ்வியல் அண்மையப் புனைவுகளில் இடம் பெறத்தொடங்கியிருப்பது வரவேற்பிற்குரிய ஒன்று. வரும் காலங்களில் இவை விரிவு பெறும் என நம்பலாம்.

## துணை நூற்பட்டியல்


1. அம்பை கதைகள். (2012). *நாகர் கோயில், காலச்சுவடு பதிப்பகம்.*
2. உதயசங்கர். (2009). *பிறிதொருமரணம்.* திருவண்ணாமலை, வம்சிபுக்ஸ்.
3. இளங்குமரன், இரா. (1977). *புலவர் (தெளிவுரை), குமரகுருபர். மீனாட்சியம்மை குறம்,* சென்னை, சைவசித்தாந்த கழக வெளியீடு.
4. எட்கர்தர்ஸ்டன். (2010). *தென்னிந்திய குலங்களும் குடிகளும், மூன்றாம் தொகுதி,* தஞ்சாவூர், தமிழ்ப்பல்கலைக் கழகம்.
5. சிவக்குமார், எம். (2021), *சினிமா ஓர் அற்புத மொழி,* சென்னை, சவுத்விஷன்புக்ஸ்
6. 1989. உயிரோவியங்கள், புகழ்ப் புத்தகாலயம், சென்னை.
7. பன்னீர் செல்வம், மணிகோ. (2009). *குறவர் பழங்குடி இனவரைவியல் ஆய்வு,* பாண்டிச்சேரி, வல்லினம்.
8. பாண்டியக் கண்ணன், (2014). *மழைப்பாறை,* விடியல்பதிப்பகம், கோவை
9. புலியூர்கேசிகன், (உ.ஆ.), திரிகூடராசப்பக்கவிராயர், (2009), *குற்றாலக்குறவஞ்சி,* சென்னை, சாரதா பதிப்பகம்.
10. ரமேஷ் பிரேம். (2006). *குருவிக்கார சீமாட்டி,* சென்னை, மருதாபதிப்பகம்.
11. முருகேசபாண்டியன், ந. (தொகு.) (2019). *என். ஸ்ரீராம் - தேர்ந்தெடுத்த சிறுகதைகள்,* சென்னை, டிஸ்கவரி புக்பேலஸ்.
12. முகில்நிலவன். (2010). *குற்றப்பரம்பரை அரசியல் - பெருங்காம நல்லூரை முன்வைத்து,* மதுரை, கருத்துப்பட்டறை.

**கட்டுரைகள்**

1. கரசூர்பத்மாபாரதி, (க.த.), "நரிக்குறவர்", பக்தவத்சலபாரதி (தொகுப்பாசிரியர்), (2017). தமிழகத்தில் நாடோடிகள், புத்தாநத்தம், அடையாளம் பதிப்பகம்.
2. சீனுவாசவர்மா, கோ. (க.த.), "நரிக்குறவர்களின் வாழ்வியல்முறை", வானமாமலை, நா. (பதிப்பசிரியர்), (2018). மக்களும் மரபுகளும், சென்னை, நியு செஞ்சுரி புக்ஹவுஸ் (பி)லிட், .
3. வேணுகோபால், சு. (க.த), "எதார்த்த வாதமும் தமிழ்ச் சிறுகதைகளும்", செல்வக்குமார். மு. (தொகுப்பாசிரியர்), (2018). தமிழ்ச்சிறுகதைகளின் சமகாலச் செல் நெறிகள், மதுரை, கருத்து - பட்டறை.
4. பன்னீர்செல்வம், மணிகோ. (க.ஆ.), "தமிழ்ப்புனை கதைகளில் அலைகுடிகள் வாழ்வு: குற்றப்பரம்பரையினுள்ளும் விளிம்பில் நிறுத்தப்பட்ட குறவர், இருளர், ஒட்டர்", முகில்நிலவன் (தொ.ஆ.), (2014). தமிழிலக்கியத்தில் குற்றப்பரம்பரையினர், பாலை, மதுரை.

**இணையதளங்கள்**

1. இரணியன், https://www.youtube.com/ watch? v=8wO9EcJ-b-M
2. தேவராஜ், மு. சூன்2012. மாற்றுவெளி, https://keetru.com/ index.php /2009-10-07-12-27 -44/ 2012 -sp-87677 1754/20482-2012-07-15-14-46-20
3. நரோபோ, 2017. தூயோனின் இருமுனையை வைத்து- பதாகை, இணைய இதழ், https:// padhaakai.com/ 2017 /12/10/ on-thooyan/
4. பன்னீர் செல்வம், மணிகோ. நவீன காலத்தில் குறவர் பழங்குடியினர் நிலை HTTPS://WWW.KEETRU.COM/ INDEX. PHP/ 2015-03-26 -07 -29 -50/ PUTHIYA -MUNNODI -MAY2016/ 31464-2016-09-15-11-46-57).
5. பபூன்-ஜல்லிக்கட்டுப்பன்றிக்கட்டு- https:// www.youtube. com/ watch?v =mRYIZSJFUsY.
6. பிரமிள், 2010. காடன்கண்டது https:// azhiyasudargal.blogspot.com/2010/09/ blog-post_06.html

**அகராதி**

1. சிங்காரவேலுமுதலியார், ஆ. 2014, அபிதானசிந்தாமணி, சீதைபதிப்பகம், சென்னை -600 005.

**பார்வை நூல்கள்**

1. அகிலன். (2009). தமிழ்ச்சிறுகதை தொகுதி. சென்னை, சாகித்யஅகாதமி
2. அறிவுமதி. (1999). அடமானம், மண்இதழ், கோவை, தமிழோசை பதிப்பகம்.
3. இறையன்பு, 2009. நரிப்பல், சென்னை. நியு செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,
4. கௌதம்சன்னா. (2017). குறத்தியாறு, சென்னை, கிழக்கு பதிப்பகம்.
5. பன்னீர் செல்வம், மணிகோ. (2020). தொன்முது குறவர் - அலைவுறும் வாழ்வு, சென்னை, தடாகம்.
6. பாலதண்டாயுதம். (2018). குற்றப் பரம்பரைச் சட்டம், மீளாய்வு, மதுரை, கருத்துப்பட்டறை.